பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 01 வியாழக்கிழமை 18.09.2025 கதிர் 312

### இது ரகசியம் அல்ல!

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று திடீரென மகிந்த ராஜபக்சவை அவரது மெதமுலன்ன கால்ட்டன் இலத்திற்குச் சென்று சந்தித்தார் என்பது ☞2

# 23 ஆயிரம் அரச பணியாளர்களை ஆபத்தில் தள்ளியது ஆளும்தரப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

மின்சாரத்துறையைமறுசீரமைப்பதாகக் கூறி, அதில் பணிபுரியும் 23,000 பணியாளர்களை ஆளும்தரப்பு ஆபத்தில் தள்ளியுள்ளது. மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத் துறைகளில் மறுசீரமைப்பு அவசியம் என்றாலும், இந்த பணியாளர்களின் தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமாச வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற ஐக்கியமக்கள்சக்தியின்உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞7

## மின்சார சபை ஊழியர்களே விரும்பின் சேவையாற்றுங்கள் இல்லையேல் வெளியேறுங்கள்

### அரசுத் தலைவர் எச்சரிக்கை

இலங்கைமின்சாரசபைதொடர்பில்மக்கள்மத்தியில் நல்லதொருநிலைப்பாடுகிடையாது. சுமார் 26 ஆயிரம் சேவையாளர்கள் மின்சார சபையில் உள்ளார்கள். பிரச்சினைகள் உள்ளன. ஆனால் பிரச்சினைகளுக்கு பொறுப்புக் கூறுபவர்கள் எவருமில்லை. சிறந்த கட்டமைப்பை உருவாக்குவதற்காகவே மின்சார சபையை நான்கு நிறுவன கட்டமைப்பின் கீழ் ☞2

# பாதாள உலகக் குழுக்களை முற்றாக அழித்தொழிப்பேன்

## அரசுத் தலைவர் அநுர சபதம்



கறுப்பு இராச்சியமாக செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களை முழுமையாக இல்லா தொழிப்பேன். இளம் ஆண், பெண் களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு கடுமையாகதீர்மானங்களைஎடுக்க வேண்டியுள்ளது. இலஞ்ச ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அரச நிர்வாகத்தில் ஒரு சிலர்பழையபழக்கத்திலேயே இன்றும் உள்ளார்கள்.பழைய பழக்கத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும் இல்லையேல் அவர்கள் பதவி நீக்கப்படுவார்கள் என அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கடவத்த-மீரிகம மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி ☞2

## தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த அமைச்சருக்கு நேற்று அனுமதி மறுப்பு



தியாக தீபம் திலீபனின் நல்லூரில் உள்ள நினைவிடத்தில்அஞ்சலிசெலுத்தசென்றகடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் தடுத்து நிறுத்தப்பட்டார்.ஷ

யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் நடைபெற்றுவருகின்றன.

நேற்று மாலை கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ☞2

## காஸாவில் நடந்துவரும் மீறல்களுக்கு இலங்கையில் நடந்ததே முன்னோடி

### மனித உரிமைகள் கண்காணிப்பக ஆசிய பணிபாளர் கருத்து

இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள சம்பவங்கள், இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும், அங்கு இடம்பெறும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

இத்தகைய பின்னணியில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்ஊடாகமுன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் இன்றியமையாததாகும். அது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கு மிக அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப்பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரால் எழுதப்பட்டிருக்கும் கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உலகளாவியரீதியில்மக்களைஅதிர்ச்சிக்கு உள்ளாக்கிய பல அட்டூழியங்கள் குறித்த ஞாபகங்கள், சில வருடங்களில் வேறு ☞6

## மனம்பேரி சரணடைவு விசாரணைக்கு அனுமதி

‘ஐஸ்’ போதைப் பொருளுக்கான மூலப் பொருள் கைப்பற்றப்பட்ட இடத்தின் உரிமையாளர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சம்பத் மனம்பேரி நேற்று நீதிமன்றில் சரணடைந்தார். அவரைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 7 நாட்களுக்கு போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய வலஸ்முல்ல நீதவான் மல்சா கொடித்துவக்கு ☞2

## மின்சார சபை பணியாளர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

மின்சார சபையை நான்கு பங்குகளாக பிரிக்கும் ஆளும்தரப்பின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்கள் நேற்று சுகயீன விடுமுறைதொழிற்சங்கபோராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

அதேவேளை இலங்கை மின்சாரசபைக்குமுன்பாகஒன்றுகூடிய மின்சாரசபை பணியாளர்கள் தமது தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்மாதம் 4 ஆம் திகதி முதல் மின்சார சபை பணியாளர்கள் மேலதிகசேவைகளில்இருந்து ☞6

## மண்டைதீவு மனிதப் புதைகுழிகளை தோண்டக்கோரி நேற்று வழக்குப் பதிவு

மண்டைதீவு மனிதப் புதை குழி தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரினால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

யாழ். தீபகற்பத்தைச் சுற்றியுள்ள தீவுகளை 1991இல் இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டை தீவுப் பகுதியில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் அங்குள்ள தேவாலயக் காணியின் கிணறு உட்பட மூன்று கிணறுகளில்போட்டுமூடப்பட்டனஎன்றுகூறப்படுவது தொடர்பில் விசாரித்து, அந்தக் கிணறுகளைச் சட்டரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு இன்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் நேற்று ஏற்கப்பட்டது. கண் கண்ட சாட்சிகளின் அடிப்படையில் சில மத குருமாரும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெரிதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. கடந்த சில வருடங்களாக அரசியல் ரீதியில் முரண்பட்டவர்களாக இருந்த இவர்கள் இருவரும் மீண்டும் இணைவதற்கான வாய்ப்புக்கள்ஆளும்என்பிபிதரப்புக்குஎதிரான அரசியல் மீள் எழுச்சிக்கு வாய்ப்பளிக்குமா என்கிற எதிர்பார்ப்பே இந்தப் பரபரப்புக்குக் காரணம்.

மகிந்தவும்விமல்வீரவன்ஸவும்நெருங்கிய நண்பர்கள். அதனாலேயே ஜேவிபியின் பரப்புரைப் பீரங்கியாக இருந்தவரான, இனவாதத்தைக்கக்கும்தீவிர பௌத்த சிங்கள பேரினவாதியான விமலைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டார் மகிந்த. சந்திரிக்காவின் ஆட்சியில் ஜேவிபியினர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்ற பின்னர், விமலுக்குத் தொடர்ந்தும் பதவி ஆசை வந்ததும் மகிந்த அவரைத்தன்பக்கம்இழுத்துக்கொண்டார். அது முதல் அவர்கள் இருவருக்கும் இடையிலான நட்பு நெருக்கமானதாக இருந்தது.

கோட்டாபய அரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர்தான் இந்த உறவில் விரிசல் விழுந்தது. கோட்டாவின் போக்கை விமலும், கம்மன்பிலவும் ஏற்றுக்கொள்ளாமல் அமைச்சரவைக்குள்ளேயே இருந்துகொண்டு விமர்சிக்கத் தொடங்க, கோபமான கோட்டா அவர்களை வெளியே போகலாம் என்ற வகையில் துரத்த முற்பட்டபோதுதான் ராஜபக்ச குடும்பத்துடனான இவர்களின் உறவு பிளவு கண்டது. அப்போதும்கூட கோட்டாவில் இருந்து தம்மை விலத்தி, மகிந்தவுடன் தம்மை நெருக்கமாக்கியே கருத்துக்கள் கூறிவந்தார் விமல் வீரவன்ஸ. அதனால், அவர் மகிந்தவை இப்போது சந்தித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கொழும்பில் அரச இல்லத்தில் இருந்து மகிந்த விரட்டியடிக்கப்பட்ட நிலையில் அவர் மீது திரும்பியிருக்கக்கூடிய அனுதாபத்தை அரசியல் முதலீடாக்கிக் கொண்டு மீண்டும் மேலெழ முடியுமா என்பதைப் பார்ப்பது இந்தச் சந்திப்பின் ஒரு நோக்கம் என்றால், தனக்கெதிரான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த சமயத்தில் அதன் மீது ஊடகங்களின் கவனம் குவிவதைத் தவிர்ப்பதும் அவரது மற்றொரு நோக்கம்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச மீது வருமானத்திற்கு மீறி சொத்துக் குவித்தார் என்று வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தனது சட்டப்பூர்வ வருமானம் மற்றும் சொத்துக்களிலிருந்து 10 வருட காலத்திற்குள் சம்பாதிக்க முடியாத ரூ. 75 மில்லியனுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்களை அவர் குவித்திருக்கிறார் என்பதே வழக்கு. லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணையத்தால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணையை ஒக்டோபர் 22 முதல் நடத்த கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன நேற்று உத்தரவிட்டார்.

வழக்கை முறையாக ஆய்வு செய்ய போதுமான நேரம் வழங்கப்படவில்லை என்று கூறி, பிரதிவாதியின் சார்பில் சட்டவாதி அனுர மெத்தேகோடா விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

ஜனவரி 1, 2009 முதல் டிசெம்பர் 31, 2014 வரை அமைச்சராக இருந்தபோது, தனது சட்டப்பூர்வ வருமானத்திற்கு அப்பாற்பட்ட வகையில் இந்த 75 மில்லியன் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்களை ஈட்டியுள்ளார். லஞ்சம் மற்றும் ஊழல் வழிகளிலன்றி வேறு நேர்வழியில் இந்தச் சொத்துக்கள் ஈடப்படவில்லை என்று லஞ்ச ஒழிப்பு ஆணையம் குற்றஞ்சாட்டுகின்றது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஆணையத்தின் சார்பில் சட்டவாதியான துணை சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவாவி, வழக்கு தொடர்பாக பிரதிவாதிக்கு வழங்க வேண்டிய அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுவிட்டதாகவும், அவர் அமைச்சராக இருந்த காலத்தில் நாடாளுமன்றத்தால் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் குறித்த அறிக்கை லஞ்ச ஒழிப்பு ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கை தொடர்பான ஆதாரங்களை வழிநடத்த எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

பதிலளித்த நீதிபதி, பிரதிவாதி சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் அதிகாரப்பூர்வமாகச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்றதால், அதற்கான ஆதாரங்களை வழிநடத்த வேண்டிய அவசியமில்லை என்று சுட்டிக்காட்டினார். விமல் வீரவன்ஸவின் சட்டவாதி தமக்கு இன்னும் கால அவகாசம் வேண்டும் என்று கேட்டார். அதனை ஏற்று ஒக்டோபர் 22 வழக்கு விசாரணைக்கு நாள் குறித்தார் நீதிபதி. அழைப்பாணை அனுப்பும்போது பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்றும் எச்சரித்தார்.

இலஞ்சம், ஊழல் தொடர்பான வழக்குகள் தற்போது மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றிருக்கும் நிலையில் தனது வழக்குத் தொடர்பான விடயங்களும் ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று தனது அரசியல் எதிர்காலத்தை அடியோடு அழித்துவிடாமல் காக்கும் வகையிலேயே மகிந்தவைச் சந்தித்து ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார் விமல். அவர் என்னதான் இப்படி அரசியல் சித்துவிளையாட்டுக்கள் காட்டினாலும் அவருக்கு எதிரான வழக்கு வலுவானது என்றும் அவரால் இந்த வழக்கிலிருந்து தப்ப முடியாது என்றும் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் லஞ்சம் பெற்று பணத்தைக் குவித்ததை அவரால் மறுக்கவே முடியாது என்றும் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

..............................................

தியாகி திலீபனின் நினைவேந்தல் நடந்துவரும் இந்த நாட்களில் நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்த முயன்ற அமைச்சர் சந்திரசேகரனைத் திருப்பி அனுப்பியது குறித்து சமூக வலைத் தளங்களில் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. அப்படிச் செய்திருக்கக்கூடாது என்று பலர் வாதமிடுகின்றனர். அது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்று கங்கணங்கட்டிக் கொண்டிருந்த அமைப்பான ஜேவிபியின் உறுப்பினரும், புலிகளுக்கு எதிரான போரை நடத்தவேண்டும்என்றுமுன்னணியில்நின்று போராடிய உறுப்பினருமான சந்திரசேகரன் இப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தளபதியானதிலீபனுக்குஅஞ்சலிசெலுத்துவது எப்படியோர் அரசியலோ அதேபோன்று அவரை அஞ்சலி செலுத்த அனுமதிக்காமல் மறிப்பதும் ஓர் அரசியல்தான்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, நடந்தது பயங்கரவாதத்திற்கு எதிரான போரே என்று ஜெனிவாவில் அமைச்சர் சந்திரசேகரனின் ஆளும்தரப்பு கூறிக்கொண்டிருக்கையில், அவர் நல்லூரில் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் அபத்தத்தை, கேவலம் வெறும் வாக்கு அரசியலுக்காக அவர் நிகழ்த்துகையில் அவரைத் தடுத்து நிறுத்துவதும் பதில் அரசியலாக முகிழ்வதைத் தவிர்க்க முடியாது.

நாயகன் பட வசனம் போல, ‘முதலில் அவர்களைத் திருந்தச் சொல்லுங்கள் நாங்கள் திருந்துகின்றோம்’ என்பதுதான் சரியானதாக இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை நேற்று தொடக்கி வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாண்டுகளுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சிடைந்தது. பொருளாதார பாதிப்பினால் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் நாடு ஒரு தசாப்த காலத்தை இழக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுவார்கள். பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பொருளாதார வீழ்ச்சியினால் பல அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டன. கடவத்த மீரிகம அதிவேக நெடுஞ்சாலையின் அபிவிருத்தி பணிகள் அவ்வாறே இடைநிறுத்தப்பட்டது. இதனால் பல நெருக்கடிகள் சமூக கட்டமைப்பிலும், பொருளாதார கட்டமைப்பிலும் ஏற்பட்டன.

கடந்த ஜனவரி மாதம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ அரசமுறை பயணம் மேற்கொண்டிருந்த போது சீன முதலீட்டுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு, பொருளாதார பாதிப்பினால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு சீன அரசுத் தலைவரிடம் வலியுறுத்தினேன்.

எமது வலியுறுத்தலுக்கு மதிப்பளித்து அபிவிருத்திதிட்டங்களுக்குநிதியுதவியளிக்கசீன அரசுத் தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார். ஆகவே இலங்கை மக்கள் சார்பில் சீன அரசுத் தலைவருக்குநன்றிதெரிவித்துக்கொள்கிறேன்.

டொலர் அலகில் அல்லாமல் யுவான் அலகில் கடன் வழங்கவும், 2.5 - 3.5 சதவீத வட்டி அடிப்படையில் கடன் வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்து விசேடகவனம்செலுத்தும்போது பொருளாதார நெருக்கடி எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது குறித்தும் ஆராயவேண்டும். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பொருளாதார நெருக்கடி மற்றும் அதனால் ஏற்பட்ட சமூகமட்ட பாதிப்புக்கள் இயற்கையாகவே தோற்றம் பெற்றதல்ல,

பொருளாதாரநெருக்கடியுடன்தொடர்புடைய பல காரணிகள் உள்ளன. பொருளாதார நெருக்கடியின் உரிமையாளர்களாகவே ஒட்டுமொத்த மக்களும் உள்ளார்கள். இலங்கையில் மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்பதை மக்களுக்கு உறுதியாக குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

பொருளாதார மீட்சிக்குரிய சகல திட்டங் களையும் சிறந்த முறையில் செயற்படுத்தவேண்டும். நாட்டில்சட்டவாட்சியை உறுதியாக செயற்படுத்தினால் பொருளாதார மீட்சிக்குரிய திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்தலாம். நாட்டில் கடந்த காலங்களில் பெரிய மீன்கள் தப்பித்துக்கொள்வதும் நெத்தலி மீன்கள் அகப்பட்டுக்கொள்வதுமான சட்டமே இருந்தது. இந்நிலைமை இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவுக்கு உயிர்கொடுத்துள்ளோம். எவரும் எதிர்பார்க்காத இடங்களில் சட்டம் சென்றுள்ளது. சட்டத்துக்கு மேற்பட்டவர்களாக இருந்தவர்கள் பலர் இன்று சட்டத்துக்கு உட்பட்டுள்ளார்கள்.

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களின் செயற்பாடு ஆயுதமேந்திய குழுக்களாகவும், கறுப்பு இராச்சியமாகவும் காணப்படுகிறது. அதிகாரமிக்க இராணுவத்தினரால் பாதாள குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களின் போதைப்பொருட்களை பொலிஸார் விநியோகித்துள்ளார்கள். பாதாளக் குழுக்களுக்கு அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். இதன் விளைவே இன்று பாரிய நெருக்கடி தோற்றம் பெற்றுள்ளது.

கறுப்பு இராச்சியமாக செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களை முழுமையாக இல்லாதொழிப்பேன். இளம் ஆண்கள், பெண்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு கடுமையாக தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது.

நாட்டில் புற்றுநோய் போன்று காணப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக உள்ளது. கடந்த கால ஊழல் மோசடிகள் முறையாக விசாரிக்கப்படுகிறது. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஊழல் மோசடியற்ற அரச நிர்வாகத்தை உருவாக்கியுள்ளேன். இருப்பினும் ஒரு சிலர் இன்றும் பழைய பழக்கத்தில் உள்ளார்கள்.

ஒன்று பழைய பழக்கத்தை திருத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் சேவையில் இருந்து விலக வேண்டும். இல்லாவிடின் நாங்கள் அவர்களை பதவி விலக்குவோம். இலஞ்சம் மற்றும் ஊழல் மோடியற்ற கலாசாரத்தை உருவாக்க அரச அதிகாரிகள் பொறுப்புடன்செயற்படவேண்டும். சட்டத்துக்கு அமைய செயற்படுங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன் என்றார்.

## மண்டைதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர் எனத் தெரிகின்றது.

அடையாளம் காணப்பட்ட கிணறுகளை அகழ உத்தரவிடக்கோரியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அகழ்வுப் பணியை மேற்கொள்வதற்கான வசதிகள் தம்மிடம் இல்லை என்று ஊர்காவற்றுறைப்பொலிஸார்சுட்டிக்காட்டியதை அடுத்து யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஜாரிடம் குறித்த வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த மண்டைதீவு புதைகுழிவிவகாரம்தொடர்பாகஅறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாருக்கு ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டார்.

குறித்தவழக்குதொடர்பாகபொலிஸார்கால அவகாசம் கோரியதால் எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

## தியாகி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாக தீபத்திற்கு அஞ்சலி செலுத்த சென்றிருந்தனர்.

அதன்போது, அங்கிருந்த ஒரு சிலர் அமைச்சரை அஞ்சலி செலுத்த அனுமதிக்க மாட்டோம்என தடுத்து நிறுத்தி முரண்பட்டனர். இதனையடுத்து அமைச்சர் திரும்பிச்சென்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரே இந்தஅஞ்சலிநிகழ்வைஏற்பாடுசெய்துள்ளனர்.

## மனம்பேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டார்.

அண்மையில் மித்தெனிய பகுதியில் ‘ஐஸ்‘ போதைப்பொருளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரசாயனங்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில், தேடப்பட்டு வந்த சந்தேகநபரான சம்பத் மனம்பேரி நீதிமன்றத்தில் சரணடையத் தயாராக இருப்பதாக அவரது சட்டத்தரணி கடந்த 15ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தமை

## விரும்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவருவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. விருப்பமானவர்கள் சேவையாற்றலாம். விருப்பமில்லாதவர்கள் செல்லலான அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

கொலன்னாவ எண்ணெய் களஞ்சியசாலையில் புதிதாக 06 எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிக்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலுசக்திதுறைநாட்டின்பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகும். ஆகவே வலுசக்தி துறையை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் பொருளாதாரத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒருசில அரச நிறுவனங்களின் சேவையாளர்கள் அந்த நிறுவனங்கள் அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டது, அவர்களுக்காகவே செயற்படுகிறதுஎன்றுநினைத்துக்கொண்டிருக் கிறார்கள்.

அரச நிறுவன மறுசீரமைப்புக்கு தடையேற்படுத்த வேண்டாம் என்று குறிப்பிட்டுக்கொள்கிறேன். இலங்கை மின்சார சபையின் சேவையாளர்களில் ஒரு தரப்பினர் சட்டப்படி வேலையில் ஈடுபடுகிறார்கள், சுகயீன விடுமுறை போராட்டத்திலும் ஈடுபடுகிறார்கள். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஈடுபடட்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வரும்போது மின்சார சபை தொடர்பான சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அந்த சட்டம் நாட்டின் வலுசக்தி இறையாண்மைக்கும், மின்சார சபையின் சேவையாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. இந்தச் சட்டத்தை நாங்கள் திருத்தம் செய்தோம். பழையதை திருத்தம் செய்தது தவறா?

இலங்கை மின்சார சபை தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. சுமார் 26 ஆயிரம் சேவையாளர்கள் மின்சாரசபையில் உள்ளார்கள். பிரச்சினைகள் உள்ளது. ஆனால் பிரச்சினைகளுக்கு பொறுப்புக்கூறுபவர்கள் எவருமில்லை. சிறந்த கட்டமைப்பை உருவாக்குவதற்காகவே மின்சார சபையை நான்கு நிறுவன கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் சேவையாளர்கள் இந்த 4 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தில் சேவையாற்றமுடியும். அவ்வாறு இல்லாவிடின் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து விலக முடியும். 9 முதல் 50 இலட்சம் ரூபாய்வரையில்நட்டஈடுவழங்கப்படும். இந்த தீர்மானத்தை மாற்ற முடியாது. சிறந்த மாற்றத்துக்கு ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## காஸாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதியமீறல்சம்பவங்களால்மாற்றிஎழுதப்படும். ஆனால்மீறல்களால்பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அதனால் ஏற்பட்ட துயரம் என்பது முடிவற்றதாகும். தீர்வளிக்கப்படாத குற்றங்கள் அதனையொத்த எதிர்கால மீறல்களுக்கான முன்மாதிரியாகத்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# சோதனை இன்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் என்ன இருந்தது?

## அறிவதில் மக்கள் ஆர்வம் என்கிறார் ஐமச எம்.பி.

பரிசோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பிய போது அதனை ஆளும்தரப்பு உதாசீனப்படுத்தியது. ஆனால் அவ்வாறு விடுவிக்கப்பட்ட இரு கொள்கலன்களில் போதைப்பொருள்தயாரிப்புக்குபயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்வாறு பரிசோதனை இன்றி விடுவிக்கப்பட்ட எஞ்சிய கொள்கலன்களில் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் மக்கள் அச்சத்திலிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் செவ்வாய்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த ஆளும்தரப்பு மக்களின் பிரச்சினைகளை மறந்துவிட்டது. மாறாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து அடக்குமுறைகளும், ஜனநாயக மீறல்களுமே இடம்பெற்று வருகின்றன. இவற்றை விடுத்து முன்னெடுக்கப்படவேண்டியஎந்தவொருமுக்கிய நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை. விவசாயிகள் முதல் சகல துறையினரும் இன்று வீதிகளிலேயே இருக்கின்றனர்.

வெகு விரைவில் நாட்டிலுள்ள மாணவர்கள் குப்பி விளக்கின் வெளிச்சத்தில் கல்வி கற்கும் மோசமான நிலைமை ஏற்படுமா என்ற அச்சம் சமூகத்தில் ஏற்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் பெருமிதமாகப் பேசிக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்களுக்கு சோறும் உப்பும் கூட திறம்பட வழங்க முடியவில்லை.

பரிசோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பிய போது அதனை ஆளும்தரப்பு உதாசீனப்படுத்தியது. ஆனால் இன்று அவ்வாறு விடுவிக்கப்பட்டஇருகொள்கலன்களில்போதைப்பொருள்தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. தற்போது இரு கொள்கலன்களின் உள்ள பொருட்கள் என்ன என்பது மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், எஞ்சியவற்றில் எவ்வாறான ஆபத்தான பொருட்கள் உள்ளன என்பது அரசாங்கத்தை தவிர வேறு யாருக்கும் தெரியாது. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். காமினி திஸாநாயக்க, ரணசிங்க பிரேமதாச, ஜே.ஆர்.ஜயவர்தன போன்ற முன்னாள் அரசுத் தலைவர்கள் மக்களுக்காக முன்னெடுத்த வேலைத்திட்டங்களுடன் ஒப்பிடுகையில், பஸ் தரிப்பிடமொன்றை புதுப்பிப்பது பெரிய விடயமல்ல.

அதுவரவேற்கக்கூடியவிடயம்எனினும், அதனைவிடமக்களுக்கு பல முக்கிய தேவைகள் உள்ளன என்பதை அரசுத் தலைவர்க்கு நினைவுபடுத்துகின்றோம். பஸ்தரிப்பிடத்தை புதுப்பிப்பதற்கு முன்னர் மாதந்தோரும் இடம்பெறும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முதலில் எடுக்கப்பட வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்கு ஆளும்தரப்பு எந்தளவு முக்கியத்துவமளித்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

கட்டுவாப்பிட்டி தேவாலயத்துக்கு விஜயம் செய்த அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்படுவார் எனக் கூறினார். ஆனால் குறைந்தபட்சம் ஒரு சந்தேகநபரேனும் இந்த ஆட்சி காலத்தில் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. பிரதி பாதுகாப்பு அமைச்சர் அந்த பதவியை வகிப்பது பொறுத்தமற்றது என்பதை அருட்தந்தை சிறில் காமினி வலியுறுத்தியிருந்தார். இவ்வாறான பின்னணியில் நாம் நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்த போதிலும், சபாநாயகரால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் எந்தளவுக்கு வெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்கப்படுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்றார்.

## கஞ்சா கலந்த மாவா பாக்கு விற்றவர் யாழ். நகரில் கைது

கஞ்சா கலந்த மாவாவை வியாபாரம் செய்த இளைஞர் ஒருவர் யாழ் நாவந்துறையில் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நாவந்துறை மண் புட்டி பகுதியில் 470 கிராம் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் நாவந்துறை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஆவார்

கைது செய்யப்பட்ட. இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்டமேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இவர் நீண்ட காலமாக கஞ்சா கலந்த மாவா விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் என்று தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நாடாளுமன்ற அடுத்த அமர்வு செப்டெம்பர் 23 தொடங்குகிறது

செப்டெம்பர் மாத இரண்டாவது நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கமைவாக நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் 10 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 10 மணி முதல் 11மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 11மணி முதல் 11.30 மணிவரயான நேரம் நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை தேசிய கட்டிட ஆராச்சி நிறுவகம் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின்னர் மாலை 5மணி முதல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பின் போதான பிரேரணைக்கான விவாதத்திற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 24ஆம் திகதி புதன்கிழமை காலை 11.30 மணி முதல் மாலை 5மணி வரை தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் மாலை 5மணி முதல் 5.30 மணிவரை ஒத்திவைப்பு நேரத்தின் போதான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணி முதல் 5மணிவரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்த விவாதம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் அன்றையதினம் மாலை 5மணி முதல் 5.30 மணி வரை எதிர்க் கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பின் போதான பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் நான்காவது அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை புதிய யுகத்துள் நுழைவு ஒத்துழைப்பதற்குச் சீனா தயார்

### அந்த நாட்டுத் தூதுவர் அறிவிப்பு

அரசுத்தலைவர் அநுரகுமாரதிசாநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை புதிய யுகத்துக்குள் நுழைந்துள்ளது. இலங்கையுடன் அர்ப்பணிப்புடனும், தொடர் ஒத்துழைப்புடனும் பணியாற்ற தயாராகவுள்ளோம். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவு வலுப்படுத்தப்பட்டுள்ளதுஎன்றுஇலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்தார்.

கடவத்தைமீரிகமஅதிவேகநெடுஞ்சாலையின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுஅரசுத்தலைவர்அநுரகுமாரதிஸாநாயக்க தலைமையில்நேற்றுநடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நான்காம் கட்ட அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன்.இந்த திட்டத்துக்கு அயராது உழைக்கும் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு காரணிகளால் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த திட்டம் தற்போதைய அரசுத்தலைவர் அநுரகுமாரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அரசுத் தலைவரின் தலைமைத்துவத்தின் இலங்கை புதிய யுகத்துக்குள் நுழைந்துள்ளது.

கடவத்தை மீரிகமநெடுஞ்சாலைதிட்டத்தை மீள ஆரம்பித்துள்ளமை திருப்புமுனையாக அமையும். இந்தத் திட்டம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்தும்.

இடைநிறுத்தப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு இலங்கை தரப்பினரால் கடுமையாக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டம் இலங்கையின் உட்கட்டமைப்புக்கு வலுவானதாக அமையும். அத்துடன் தேசிய ரீதியான சவால்களையும் வெற்றிக்கொள்ளும். இலங்கையுடன் அர்ப்பணிப்புடனும், தொடர் ஒத்துழைப்புடனும் பணியாற்ற தயாராகவுள்ளோம் என்றார்.

## ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த சகலர் மீதான தடையும் உடன் நீக்கம்

### ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்ட காரணத்தினால் கட்சி உறுப்புரிமை நிறுத்தப்பட்ட மற்றும் ஒழுகாற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு அனைத்தையும் நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு செவ்வாய்க்கிழமை மாலை கட்சியின் தலைவர் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைவமையில் புறக்கோட்டையில் அமைந்துள்ள சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் கூடி, இந்த்தத தீர்மானத்தை எடுத்துள்ளதுடன் இது தொடர்பில் செயற்படும்போது எழக்கூடிய சட்ட பின்னணிகளை தேடிப்பார்ப்பதற்காக முன்னாள் சட்டமா அதிபர் அரசுத் தலைவர் சட்டத்தரணி திலக்மாரபன்ன தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு செயற்குழு எடுத்த இந்த நடவடிக்கை காரணமாக மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து கூட்டணியாக செயற்படுவதற்காக கலந்துகொண்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றி செலுத்தும் பிரேரணை ஒன்றும் இந்த செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பற்ற செயல் எதனால்?

யாழ்ப்பாணத்தில் நல்லூர் அரசர் காலத்தில் இருந்த வரலாற்று சிறப்புமிக்க மந்திரி மனையின் ஒரு பகுதி நேற்றைய மழையால் இடிந்து விழுந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக தமிழர் அரசியல், கலாசாரம், நிர்வாகம் ஆகியவற்றின் சான்றாகத் திகழ்ந்த இந்தக் கட்டடம், யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. எனினும், முறையான பராமரிப்பின்மையும், அலட்சியமும் காரணமாக இந்த வரலாற்று சின்னம் அழிந்து கொண்டிருக்கிறது.

இடிந்துபோன பகுதி பல ஆண்டுகளாகவே சேதமடைந்திருந்தது. சில இரும்புக் கம்பிகள் மூலமாகத் தற்காலிகமாகத் தாங்கிப் பிடிக்கப்பட்டிருந்த அந்தச் சுவர்கள், திருடர்களால் கம்பிகள் அகற்றப்பட்டதால் முற்றிலும் பாதுகாப்பின்றிப் போனது. அதன் விளைவாக, மழையால் ஈரமாகி பலவீனமான அந்தச் சுவர் நேற்று இடிந்து விழுந்தது. இச்சம்பவம், ஒரு கட்டடத்தின் சேதத்தை மட்டுமல்ல; தமிழர் பாரம்பரியத்தின், தொல்லியல் அடையாளத்தின், வரலாற்றுச் சான்றின் முற்றுப்புள்ளியாகவும் மாறியிருக்கிறது.

### தொல்லியல் திணைக்களத்தின் இரட்டை முகம்

இந்த மனை தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்தது. ஆகையால், பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் மிகுந்தது. ஆனால், திணைக்களம் தன் கடமையைச் செய்யாமல் இருந்ததே இன்று நடந்த அழிவுக்குக் காரணம். தொல்லியல் திணைக்களம் தன் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தொல்லியல் இடங்களை பாதுகாக்கத் தவறி வருகிறது என்ற குற்றச்சாட்டுகள் புதிதல்ல.

இன்னொரு பக்கம், தொல்லியல் இடங்கள் என்று அறிவிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் சிறு அபிவிருத்தி வேலைகளைச் செய்தாலும், அல்லது குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விரிவாக்க முயன்றாலும், அதனைத் தடுப்பதில் தொல்லியல் திணைக்களம் மிகுந்த தீவிரம் காட்டுகிறது. உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுத்து, நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றும், காவல்துறையை பயன்படுத்தியும் தமிழர் வாழ்வாதாரத்தையே பாதிக்கும் விதமாகச் செயல்படுகிறது.

இதனால் ஒரு கேள்வி எழுகிறது, ''மக்களின் வாழ்வாதாரத்தைத் தடுக்கும் அளவிற்கு சுறுசுறுப்பைக் காட்டும் திணைக்களம், தன் பொறுப்பில் இருந்த வரலாற்று அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டியபோது ஏன் பேசாமல் இருந்தது?'' அது தனியாருக்குரிய சொத்து, அதில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றால் அவரது சம்மதம் பெறப்படவேண்டும் என்பதெல்லாம் வெறும் சாக்குப் போக்குகளே. அந்த நிலத்தின் உரிமையாளர் அந்த இடத்தை தொல்லியல் திணைக்களத்திற்கு வழங்கவும், அந்தக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தனது சம்மதத்தை வழங்கியிருந்தார். அப்படியிருந்தும் கட்டடம் அழிவடைய விடப்பட்டுள்ளது. இவற்றையொட்டிப் பார்க்கும்போது தொல்லியல் திணைக்களத்தின் பாராமுகத்தின் பின்னணி என்ன என்ற கேள்வியைத் தவிர்க்க முடியாது.

### இனவாதக் கோணமா?

இந்தக் கேள்விக்கான பதில் எளிதல்ல. ஆனால், பல தமிழர்களின் மனதில் உருவாகும் சந்தேகம் ஒன்றே தொல்லியல் திணைக்களத்தின் அலட்சியத்துக்கு இன அடிப்படையிலான பாகுபாடு காரணமாக இருக்கக்கூடும் என்பதே அது. சிங்கள பகுதிகளில் உள்ள தொல்லியல் இடங்கள் சீரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, சுற்றுலா தளங்களாக மாற்றப்படுகின்றன. ஆனால் தமிழர் அடையாளங்களுடன் இணைக்கப்பட்ட இடங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றின் இடிபாடுகள் அழிந்து போக அனுமதிக்கப்படுகின்றன.

இது வரலாற்றை அழிக்கும் அரசியல் திட்டத்தின் பகுதியாகவே தமிழர்களால் பார்க்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் அடையாளங்களை அழித்துவிட்டால், அந்த சமூகத்தின் வரலாற்று உரிமைகள் பலவீனப்படுத்தப்படலாம். தமிழர் அரசாட்சி, தமிழர் ஆட்சி அமைப்புகள், கலாசார அடையாளங்கள் ஆகியவற்றை நிரூபிக்கும் சின்னங்கள் அழிந்து விட்டால், எதிர்காலத்தில் அந்த வரலாறு மறுக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

### பாதுகாப்பின்மையின் விலையுயர்ந்த விளைவு

மந்திரி மனை இடிந்து விழுந்தது ஒரு எச்சரிக்கை மணி. ஒருமுறை அழிந்த தொல்லியல் அடையாளத்தை மீட்டெடுக்க முடியாது. அது மண்ணாகவும் தூளாகவும் மாறிவிடும். ஒரு சமூகத்தின் வரலாற்று நினைவுகளை அழிக்கும் செயல், அந்தச் சமூகத்தின் மன உறுதியையும் பாதிக்கும். யாழ்ப்பாண மக்கள் தங்கள் அடையாளங்களுடன் இணைக்கப்பட்ட இந்த வரலாற்று சின்னம் அழிந்துவிட்டதைப் பார்த்து துயரம் அடைவது இயல்பே.

திணைக்களம் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தால், இன்று இந்த அழிவு நிகழ்ந்திருக்காது. இரும்புக் கம்பிகளைச் சீராகப் பராமரித்திருந்தாலோ, நிலையான சுவர்க் கட்டுமானங்களைச் செய்திருந்தாலோ, குறைந்தபட்சம் இடிந்து விழுந்தது தடுக்கப்பட்டிருக்கும். இதுவே திணைக்களத்தின் அலட்சியத்தையும், செயலற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

### தமிழர் சமூகத்தின் கோரிக்கை

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, தமிழர் சமூகத்தின் நியாயமான கோரிக்கை ஒன்று தெளிவாகிறது. தமிழர் வரலாற்று மற்றும் தொல்லியல் அடையாளங்களை, தொல்லியல் திணைக்களத்தின் கைகளில் மட்டும் வைக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, உள்ளூர் நிபுணர்கள், பல்கலைக்கழக வரலாற்றாசிரியர்கள், சமூக அமைப்புகள், சர்வதேச தொல்லியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் தனித்துவமான பாதுகாப்பு வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும்.

மேலும், இழப்பிற்குப் பொறுப்பு ஏற்காமல் இருக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கு எதிராகத் தேவையான விசாரணைகள் நடைபெற வேண்டும். தமிழர் தொல்லியல் அடையாளங்களை அழிய விட்டது தற்செயலா? அல்லது திட்டமிட்ட புறக்கணிப்பா? என்ற கேள்விக்கு தெளிவான பதில் தேவைப்படுகிறது.

நல்லூர் மந்திரி மனை இடிந்தது, காற்றிலும் மழையிலும் நிகழ்ந்த ஒரு இயற்கைச் சம்பவம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் அடையாளத்தை அழிக்கும் அரசியல் அலட்சியத்தின் வெளிப்பாடாகும்.

தொல்லியல் திணைக்களம், தமிழர் மக்களின் நிலங்களில் சிறிய மாற்றங்களுக்குப் பிறிதொரு முகம் காட்டி, தன் பொறுப்பில் இருந்த வரலாற்று சின்னங்களைப் பாதுகாக்காமல் அழிய விட்டது என்பது இனவாதப் பாகுபாட்டின் வெளிப்பாடு என்பதை மறுக்க முடியாது.

எனவே, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்க, தமிழர் தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் சிறப்பு அமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. அதுவே கடந்த காலத்தைப் பாதுகாக்கவும், எதிர்கால தலைமுறைகள் தங்கள் அடையாளத்தை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கும்.

## தமது அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்த ஜேவிபியின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

### ஹர்ஷன நாணயக்கார எம்.பி. கேள்வி

தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் நளின் ஹேவகே அண்மையில் எந்தவொரு அரசியல்வாதியிடம் சொத்துக்களும், வாகனங்களும் காணப்படுகின்றதோ அவர்கள் கள்வர்கள் என்று தெரிவித்திருந்தார். அவ்வாறெனில் தற்போது வெளியிடப்பட்டுள்ள வசந்த சமரசிங்க உள்ளிட்ட அமைச்சர்களின் சொத்து விவரங்கள் குறித்து ஜே.வி.பியின் நிலைப்பாடு என்னவென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எந்தவொரு அரசியல்வாதியிடம் சொத்துக்களும், வாகனங்களும் காணப்படுகின்றதோ அவர்கள் கள்வர்கள் என தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் நளின் ஹேவகே அண்மையில் தெரிவித்திருந்தார். தற்போது வசந்த சமரசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரின் சொத்து விவரங்கள் வெளியாகியுள்ளன. அது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வசந்த சமரசிங்க மாத்திரமின்றி அவரைவிட அதிக சொத்துக்களைக் கொண்ட மேலும் பல அமைச்சர்கள் உள்ளனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஏனைய கட்சியினரின் சொத்துக்களை தவறான கோணத்தில் ஜே.வி.பி. பார்ப்பதைப் போன்று நாம் பார்க்கவில்லை. கடந்த காலங்களில் இவர்கள் இவ்வாறான காரணிகளுக்கு எதிராகவே பரப்புரைகளை முன்னெடுத்தனர். அரசியல்வாதிகளிடம் சொத்துக்கள் இருக்கவே கூடாது என இவர்கள் மக்கள் மத்தியில் கோபத்தை தூண்டினர். ஆனால் தற்போது அவர்களது சொத்துவிபரங்கள் வெளியானதன் பின்னர் அது அவ்வாறு இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

அமைச்சர்களிடம் இவ்வாறு சொத்துக்கள் இருக்குமெனில், ஜே.வி.பி. கட்சி நிதியத்தில் எந்தளவு சொத்து காணப்படும் என்று சிந்திக்க வேண்டும். ஏனையோர் உடுத்திய ஆடைகளையே நாம் அணிவதாகக் கூறியவர்களே இவ்வாறு கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாகவுள்ளனர். ஆனால் ஓராண்டுக்குள் ஜே.வி.பி.யினர் இந்த நிலைமையிலிருந்து முன்னேற்றமடைந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. முடிந்தளவு மக்களை ஏமாற்றியிருக்கின்றனர்.

அரசுத் தலைவர் பதவியேற்று இன்னும் ஒரு வாரத்துக்குள் ஓராண்டு நிறைவடையவுள்ளது. மின் கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறியவர்கள் தற்போது மீண்டும் 8 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான முன்மொழிவை சமர்ப்பித்துள்ளனர். ஓராண்டுக்குள் மூன்றாவது முறையாக கட்டணத்தை அதிகரிக்கவுள்ளனர். எரிபொருள் விலையைக் குறைப்பது மாத்திரமின்றி, விலை சூத்திரத்தையும் இரத்து செய்வதாகக் கூறினர். ஆனால் இன்று எரிபொருள் விலையும் குறைக்கப்படவில்லை, சூத்திரத்திலும் ஒரு எழுத்து கூட நீக்கப்படவுமில்லை.

குடும்ப ஆட்சி முற்றாக நீக்கப்படும் எனக் கூறியவர்கள் இன்று குடும்பத்தவர்களுக்கு இராஜதந்திர நியமனங்களைக் கூட வழங்கியுள்ளனர். உத்தியோகபூர்வ இல்லங்கள், அரச வாகனங்களை தாம் பெற்றுக் கொள்ளப் போவதில்லை எனக் கூறியவர்கள் இன்று சகல சிறப்புரிமைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ஜே.வி.பி.யின் உண்மையான முகம் எது என்பதை மக்கள் தற்போது தெரிந்து கொண்டுள்ளனர் என்றார்.

## ஆளும்தரப்பு சொன்ன பொய்கள் படிப்படியாக அம்பலமாகின்றன

### தயாசிறி எம்.பி. சுட்டிக்காட்டு

தேசிய மக்கள் சக்தி மக்களிடம் எந்தளவுக்கு பொய்களைக் கூறியிருக்கிறது என்பது தற்போது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரை கொள்ளையர்களென மக்கள் மத்தியில் கடுமையான பரப்புரைகளை முன்னெடுத்தவர்களின் சொத்து மதிப்பு 25 - 30 கோடி ரூபாவாகக் காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சுமத்தினார்.

குருணாகலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி மக்களிடம் எந்தளவுக்கு பொய்களைக் கூறியிருக்கிறது என்பது தற்போது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினருக்கு மாத்திரமே சொத்துக்கள் காணப்படுவதாகவும், அவர்கள் ஊழல் மோசடியூடாகவே சொத்துக்களை சேகரித்துள்ளதாகவும் இவர்கள் தேசிய மக்கள் சக்தியினரால் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.

தமது கட்சி ஆதரவாளர்களே வாகனத்துக்காக எரிபொருளைக் கூட வழங்குவதாக வசந்த சமரசிங்க முன்னதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவ்வாறு குறிப்பிட்டவர்களின் சொத்து மதிப்பு இன்று 25 - 30 கோடியாகக் காணப்படுகிறது. மற்றுமொருவர் அநுராதபுரத்தில் மேலதிக வகுப்பினை நடத்துவதற்கு கட்டடமொன்றை வாடகைக்கு வழங்கி அதன் மூலம் தனக்கான வருமானத்தைப் பெற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் மேலதிக வகுப்புக்களுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தான் இன்று இவ்வாறான கருத்துக்களையும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான போலியான

அரசியல் கலாசாரம் தோற்கடிக்கப்பட வேண்டும். நாட்;டில் எந்தவொரு தரப்பினருக்கும் செயற்திறனுடன் பணியாற்ற இடமளிக்காமல் நாட்டை வீழ்ச்சியடைச் செய்தவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றார்.

## அரச சேவையை டிஜிட்டலாக்க 2026இல் அதிக நிதி ஒதுக்கீடு

### அரசுத் தலைவர் தெரிவிப்பு

அரச சேவையை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்த 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கிடப்படும். அடுத்தாண்டு முதல் சகல அரச கொடுக்கல் வாங்கல்களும் டிஜிட்டல்மயப்படுத்தப்படும். மக்களுக்கு சிறந்த சேவை வழங்குதற்காகவே அரச சேவைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அரச சேவையாளர்கள் மக்களுக்காக செயற்பட வேண்டுமென அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

கடவத்த -மீரிகம மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி பணிகளை நேற்று தொடக்கி வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தை மலினப்படுத்தும் முன்னாள் அரசுத்தலைவர்கள் இந்த நாட்டில் உள்ளார்கள். ஊர்வலம் போன்று செல்கிறார்கள், அழுகிறார்கள், பழிவாங்கல் என்று குறிப்பிடுகிறார்கள்.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சிறப்பு சலுகை வழங்க முடியாது. ஆகவே குற்றஞ்சாட்டுபவர்கள் குற்றம் சாட்டட்டும். ஊர்வலம் செல்லட்டும்.

அரசசேவையாளர்கள் இன்று அச்சத்துடன் செயற்படுவதாக குறிப்பிடப்படுகிறது. கடந்த கால ஆட்சியாளர்கள் முன்பாக அரச அதிகாரிகள் வாய்திறப்பதில்லை. ஆட்சியாளர்களின் தீர்மானம் சட்டமாக காணப்பட்டது. இன்று அவ்வாறான நிலையா உள்ளது. அரசசேவையாளர்கள் தற்போதுதான் சுயாதீனமாக செயற்படுகிறார்கள்.

அரசசேவையை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்த 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கிடப்படும். அடுத்தாண்டு முதல் சகல அரச கொடுக்கல் வாங்கல்களும் டிஜிட்டல்மயப்படுத்தப்படும். மக்களுக்கு சிறந்த சேவை வழங்குதற்காகவே அரச சேவைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அரச சேவையாளர்கள் மக்களுக்காக செயற்பட வேண்டும்.

கிராமப்புறங்களில் அரச சேவையை டிஜிட்டல் மயமாக்க விசேட அவதானம் செலுத்தப்படும். ஊழல் மோசடியை இல்லாதொழிக்க வேண்டுமாயின் அரச சேவை டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும். சிறந்த மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரச சேவையாளர்கள் சிறந்த மாற்றத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

# கடவத்தை - மீரிகம நெடுஞ்சாலை 2028 புத்தாண்டுக்குள் முடிக்கப்படும்

## அமைச்சர் விமல் ரத்தநாயக்க தெரிவிப்பு

கடவத்தை-மீரிகம அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டம் 2028 புத்தாண்டுக்குள் நிறைவு செய்யப்படும்.தெற்கு அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்படும்.முதலீட்டாளர்கள் தைரியமாக தமது பணிகளில் ஈடுபடலாம்.கடந்த அரசாங்கங்களை போன்று நாங்கள் நெருக்கடிகளை ஏற்படுத்த போவதில்லை யென போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கடவத்தை-மீரிகமஅதிவேகநெடுஞ்சாலையின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில்நேற்றுநடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடவத்தை -மீரிகம அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டத்துக்கு நிதியுதவியளித்துள்ள சீன அரசாங்கத்துக்கு இலங்கை மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கை மக்கள் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் புதிய பாதையை தெரிவு செய்தார்கள். 75 ஆண்டகால ஊழல்மிக்க பாதையை புறக்கணித்து அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தலைமையில் புதிய பாதையை தெரிவுசெய்துள்ளார்கள். தவறான பாதையினால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்து சமூக கட்டமைப்பும் பாதிக்கப்பட்டது.

இந்த அபிவிருத்தி கருத்திட்டத்துக்கான ஒப்பந்தம் 2015 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு அபிவிருத்தி பணிகள் 2020 ஆம் ஆண்டளவிலே ஆரம்பிக்கப்பட்டன.அதனைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி,ஊழல் மோசடி உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் இந்த அபிவிருத்தித் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைநிறுத்தப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டத்தை மீள ஆரம்பிக்கும் போது 35 ஆயிரம் மில்லியன் ரூபாவை மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது.ஆகவே கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் சிறந்த திட்டமிடலுடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆகவே தேசிய முதலீட்டாளர்கள் தைரியமாக தமது பணிகளை ஆரம்பிக்க முடியும்.கடந்த கால அரசாங்கங்களை போன்று எமது ஆளும்தரப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தாது.

கடவத்தை -மீரிகம அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டம் 2028 புத்தாண்டுக்குள் நிறைவு செய்யப்படும்.தெற்கு அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்படும்.அத்துடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையும் புனரமைக்கப்படும் என்றார்.

# ஆளும்தரப்பினரின் சொத்துக்கள் குறித்தும் முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்

## முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்து

ஆளுந்தரப்பினர் மீது சொத்து விவரங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். விசாரணைகளை முன்னெடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை நாட்டுக்கு வெளிப்படுத்தப்படுமென முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுந்தரப்பினர் மீது சொத்து விவரங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். இலஞ்ச, ஊழல்ஒழிப்புஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையைநாட்டுக்குவெளிப்படுத்துவதற்குகிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும். விசாரணைகளில் எவரேனும் தவறிழைத்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கெதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் தாம் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்ததாக ஜே.வி.பி.யினர் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் தற்போது அவர்கள் கூறியதை விட முற்றிலும் மாறுபட்ட நிலைமையே காணப்படுகிறது. இதில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் இதன் ஊடாக அவர்கள் தமது ஆதரவாளர்களையும், கட்சி அங்கத்தவர்களையும் ஏமாற்றியிருப்பார்களாயின் அதனை அனுமதிக்க முடியாது. எனவே இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சுயாதீனமாக இது குறித்து நடவடிக்கை எடுக்கும் என நம்புகின்றோம்.

அரசுத் தலைவர்களுக்குரிய சிறப்புரிமைகள் நீக்கப்பட்டமை தொடர்பில் மீண்டும் கலந்தாலோசித்து தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். தற்போதைய அரசுத் தலைவர் பாதாள உலகக் குழுக்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். அவ்வாறிருக்கையில் அவரது ஓய்வின் பின்னர் அவருக்கு பாதாள உலகக் குழுக்களால் ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அவரது பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்துவது? அரச தலைவர்களுக்கு பாதுகாப்பு என்பது அத்தியாவசியமானதாகும்.

எவ்வாறிருப்பினும் அநாவசிய செலவுகளைத் தவிர்க்க வேண்டியதும் அவசியமாகும். எனவே அவற்றை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அவற்றுக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை. முன்னாள் அமைச்சர்கள் குடியிருந்த வீடுகள் இன்று மூடப்பட்டுள்ளன. 100 ஆண்டுகள் பழமையான அந்த வீடுகள் சேதமாகிக் கொண்டிருக்கின்றன. ஆளும்தரப்பு இவை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## காஸாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகழ்கின்றன.

இலங்கை ஆளும்தரப்பினால் 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையினால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் அப்போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனிதகுலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இருப்பினும் அவை இன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்தகாலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சிபீடமேறிய ஆளும்தரப்புக்கள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயற்பட்டுவந்திருப்பதன் மூலம், எதனைச் செய்தாலும் பின்விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்துவந்திருக்கின்றன. ஆகையினாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையினால் நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை இம்மாதம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 60 ஆவது கூட்டத்தொடரில் மீளப்புதுப்பிக்கவேண்டும்.

இலங்கையில் சுமார் 26 வருடகாலமாக நீடித்த உள்நாட்டுப்போரின்போது பொது மக்கள் மீதான தாக்குதல்கள், சட்ட விரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக இருதரப்பினராலும் மிகமோசமான மீறல் குற்றங்கள் இழைக்கப்பட்டன. இறுதிக்கட்டப்போர் இடம்பெற்ற சில மாதங்களில் எஞ்சியிருந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும், தமிழ் பொதுமக்களும் இலங்கை இராணுவத்தினால் மிகக்குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்திய அதேவேளை, இலங்கை இராணுவம் மனிதாபிமான உதவிகள் உட்செல்வதைத் தடுத்ததுடன் குறித்த சில பகுதிகள்மீது வான் மற்றும் ஆட்டிலறி தாக்குதல்களை நடாத்துவதற்கு முன்னர் அவற்றை 'போர் சூனியவலயங்களாக' அறிவித்தன. அதற்குள் இயங்கிய மருத்துவ சேவை வழங்கல்கள் தொடர்ந்து இலக்குவைக்கப்பட்டன. இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இச்சம்பவங்கள், இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும், அங்குபிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

ஜே.வி.பி எழுச்சி மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான போர் என்பவற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் நாடளாவிய ரீதியில் இதுவரை சுமார் 20 மனிதப்புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் வேறுபணிகளின்போது தற்செயலாகவே கண்டறியப்பட்டன. அண்மையில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழியில் 1990 களில் இராணுவக் காவலின் கீழ் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் 200க்கும் மேற்பட்டோரின் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இருப்பினும் போதிய தொழில்நுட்ப வசதிகள் இன்மை மற்றும் அரசியல் தன்முனைப்பு இன்மை போன்ற காரணங்களால் இதுவரையில் இலங்கையில் எந்தவொரு மனிதப்புதைகுழி தொடர்பிலும் விசாரணைகள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் இன்றியமையாததாகும். அது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கு அவசியமாகும் என வலியுறுத்தியுள்ளார்.

## மின்சார சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகிசட்டப்படிவேலைசெய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்த நடவடிக்கையின் இரண்டாம் கட்டமாக நேற்றும் இன்றும் இருநாள் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக இலங்கை மின்சாரசபை அனைத்து தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது. அதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள மின்சாரசபை தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 21800 பணியாளர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

சுகயீன விடுமுறை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட மின்சாரசபை பணியாளர்கள் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இலங்கை மின்சாரசபைக்கு முன்பாக ஒன்றிணைந்து கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மின்சாரசபை பணியாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, பணியாளர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த சலுகை மற்றும் கொடுப்பனவை வழங்குமாறும் வலியுறுத்தியிருந்தனர்.

மின்சாரசபை பணியாளர்களின் சலுகைகளையும் உரிமைகளையும் இரத்து செய்யாதே, மின்சார சபை பணியாளர்களின் முன்மொழிவு ஆவணத்தில் கைச்சாத்திடு, அனுர மின்சார சபையை தனியார் நிறுவனங்களுக்கு விற்றார், ஆளும்தரப்பினர் தேர்தலுக்கு முன்னர் பொய்யான வாக்குறுதிகளை மாத்திரமே எமக்கு வழங்கினர் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியும் முழக்கமிட்டும் ஆர்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் நூற்றுக்கணக்கான போராட்டக்கார்கள் மின்சாரசபைக்கு முன்பாக கூடியிருந்தனர். ஆர்ப்பாட்டக்கார்கள் முன்னோக்கிச் செல்வதை தடுப்பதற்காகவும், பாதுகாப்பு கருதியும் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

போராட்டம் குறித்து இலங்கை மின்சாரசபை சுதந்திர பணியாளர் சங்க செயலாளர் பிரபாத் பிரியந்த குறிப்பிடுகையில்,

செப்டெம்பர் 4 24 முன்மொழிவுகளுடன் மின்சாரசபை தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்ட கடிதத்துக்கு அரச தரப்பிலிருந்து இதுவரை எவ்வித பதில்களும் வழங்கப்பட வில்லை. ஆளும்தரப்பின் தீர்மானத்துக்கு நாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக ஆட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும் அது உண்மையல்ல அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் 72 இலட்ச மின் பாவனையாளர்களும், 21 ஆயிரத்துக்கு மேற்பட்ட மின்சார பணியாளர்களும் நெருக்கடிக்கு ஆளாக்கக்கூடும்.

உழைக்கும் வர்க்கத்தின் ஆளும்தரப்பு என ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது தொழிலாளர்களின் உரிமையை பறிக்கும் வகையில் செயற்படுகின்றனர். அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் செயலை ஒருபோதும் எம்மால் ஏற்கமுடியாது. நீதிமன்றதீர்ப்பையும் அவமதித்து மின்சாரசபை பணியாளர்களின் வரப்பிரசாதங்களை இரத்து செய்துள்ளனர். எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஆளும்தரப்பு எமது கோரிக்கைகளுக்கு பதிலளிக்காதுவிடின் எமது தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபட தயாராக உள்ளோம் என்றார்.

## 23 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான அரச பணியாளர்களின் வாக்குகளைப் பெற்று இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால் தற்போது அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அரச பணியாளர்கள் திருப்தியற்ற நிலையிலுள்ளனர். நாட்டின் மதிப்புமிக்க வளமாகக் கருதப்படும் சுமார் 15 இலட்சம் அரச பணியாளர்களின் ஆதரவை ஆளும்தரப்பு அலட்சியப்படுத்துகிறது.

மின்சாரத் துறையை மறுசீரமைப்பதாகக் கூறி, அதில் பணிபுரியும் 23,000 பணியாளர்களை ஆளும்தரப்பு ஆபத்தில் தள்ளியுள்ளது. மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத்துறைகளில் மறுசீரமைப்பு அவசியம் என்றாலும், இந்த பணியாளர்களின் தொழில் மற்றும் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

அதிகாரத்திற்கு வர மின்சார சபை பணியாளர்களின் உதவியை நாடிய இந்த ஆளும்தரப்பு, இன்று அவர்களை மறந்து செயல்படுகிறது. ஓய்வு பெற விரும்புபவர்கள் தாமாக முன்வரலாம் என்று கூறுவது நியாயமற்றது. முன்னாள் மின்சார சபை தொழிற்சங்கத் தலைவராகவும், தற்போது கடுவலை நகரசபை தலைவர் இது தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

மின்சார பணியாளர்களைத் தவறாக வழிநடத்தி வீதிக்கு இறங்கச் செய்துவிட்டு, தற்போது அந்த பணியாளர்களை மறந்துவிட்டு அவரும் சுயநலத்துடன் செயற்படுகின்றார். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு வந்தபோது, ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே 23,000 மின்சார சபை பணியாளர்களின் உரிமைகள் குறித்து பேசியது.

மற்ற கட்சிகள் மௌனம் காத்தபோது, பணியாளர்களின் தொழில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின்னரே மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எமது கட்சியே வலியுறுத்தியது. தேர்தல் மேடைகளில் வீராவேசமாகப் பேசிய ஜே.வி.பி. இன்று பணியாளர்களின் உரிமைகள் குறித்துப் பேச தைரியமற்றிருக்கிறது.

மக்களையும், அரச பணியாளர்களையும் ஏமாற்றிய அரசாங்கத்திற்கு, வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் சரியான பாடம் புகட்டுமாறு அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# மக்கள் வரிசையில் நின்று இறந்தது போன்ற நிலை மீண்டும் ஏற்பட இடமளிக்கமாட்டோம்

## அரசுத் தலைவர் அநுரகுமார சூளுரை

எரிபொருள், எரிவாயு இல்லாமல் மக்கள் வரிசையில் நின்று இறந்தது போன்ற ஒரு நெருக்கடி இலங்கையில் மீண்டும் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பெற்றோலிய களஞ்சிய வளாகத்தில் 6 எண்ணெய்க் களஞ்சிய தாங்கிகளின் நிர்மாணப் பணிகளை நேற்று தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொலன்னாவை பெற்றோலிய களஞ்சிய வளாகத்தில் 15,000 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று தாங்கிகள், 7,000 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தாங்கிகள் மற்றும் கொலன்னாவை பெற்றோலிய சேமிப்பு வளாகத்தில் 5,000 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தாங்கி உள்ளிட்ட ஆறு களஞ்சிய தாங்கிகளின் நிர்மாணப் பணிகள் இவ்வாறு தொடங்கப்பட்டது.

தற்போதைய ஆளும்தரப்பு எரிசக்தித் துறையின் இறையாண்மையைப் பாதுகாத்து பொருளாதார இறையாண்மையை உருவாக்க பாடுபடுவதாகவும், அந்த முற்போக்கான மாற்றத்திற்காக அனைத்து மக்களின் ஆதரவையும் கோருவதாகவும் அரசுத் தலைவர் கூறினார்.

நிகழ்வில் உரையாற்றிய அரசுத்தலைவர் அநுரகுமார மேலும் கூறியதாவது:

மக்களின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்பு ஆளும்தரப்பிற்கு உள்ளது. தற்போதைய ஆளும்தரப்பு அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

எந்தவொரு தொழிற்சங்கமும் ஆளும்தரப்பு மேற்கொள்ளும் திட்டத்தைத் தடுத்தால், அதன் தொடர்பில் முடிவு எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். ஒரு நிறுவனம் பழமைவாத மரபுகளுடன் முன்னேற முடியாது. அதேபோல், ஒரு நிறுவனம் மனித உழைப்பை மட்டும் கொண்டு முன்னேறாது.

ஒரு நிறுவனம் முன்னேற வேண்டுமென்றால், தொழில்நுட்பமும் அறிவியலும் இணைக்கப்பட வேண்டும். தொழில்நுட்பம் அல்லது அறிவியலுக்கு பயப்படும் எந்த நிறுவனமும் வளர்ச்சியடையாது.

தொழில்நுட்பத்திற்கு பயப்படும் அல்லது புதிதாக ஏதாவது மேற்கொள்ள அஞ்சும் நாடு முன்னேறாது. எனவே, நிறுவனங்களை இயந்திரமயமாக்கலுக்கு உட்படுத்த வேண்டும். நிறுவனங்கள் இயந்திரமயமாக்கப்பட்டாலும், நாம் இயந்திரத்தனமானவர்கள் அல்ல.

நாம் நெகிழ்ச்சியான மக்கள். எனவே, நிறுவனங்கள் இயந்திரமயமாக்கப்படும்போது பணியாளர்களுக்கு என்ன நடக்கும் என்பதை நாங்கள் நன்கு புரிந்துகொண்டு அதற்கு தீர்வுகளை வழங்குவோம்.

ஒரு ஆளும்தரப்பு கவிழ்க்கப்படும்போது, ஆளும் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்கள் புதிதாக தெரிவாகும் ஆளும்தரப்பின் தொழிற்சங்கத்தில் சேர அழுத்தம் கொடுக்கப்படும் என்பது முன்பிருந்த நிலையாகும். இல்லையெனில், மற்ற தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நிறுவனத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.

எண்ணெய் நிறுவன பணியாளர்கள் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர். வரலாற்றில், வாக்குச்சாவடிகளைக் கொள்ளையடிக்கக் கூட அரச பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

கடந்த ஆண்டு, இதுபோன்ற ஒரு அரசியல் கலாச்சாரத்தை நாங்கள் மாற்றினோம். எந்த அரச ஊழியரும் இதனால் துன்புறுத்தப்படவில்லை. நம் நாட்டில் உள்ள பொதுமக்கள் முன்பு போலவே அதே அழிவுகரமான முடிவை எதிர்பார்க்கிறார்களா? மக்கள் இதுபோன்ற விடயங்களை எதிர்பார்த்திருந்தால், அவர்கள் எங்களுக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள்.

அவர்கள் பழைய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். அவர்கள் 159 நாடாளுமன்ற இடங்களை வழங்கியிருக்க மாட்டார்கள். ஆனால் சிலர் மாறத் தயாராக இல்லை. மாற்றத்திற்கு தயாராகுமாறு நாங்கள் அவர்களை அழைக்கிறோம்.

இல்லையெனில், நாங்கள் முடிவுகளை எடுக்கத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் தோண்டித் தோண்டி பார்த்துப் பார்த்து பணியாற்றுவதில்லை. இந்த முற்போக்கான மாற்றத்தை குறுகிய அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம்.

பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனத்தின் நவீனமயமாக்கலுக்கு ஈரானியத் தலைவர் வந்து அடிக்கல் நாட்டினார். ஆனால் உரிய காலத்தில் அந்தப் பணி நடைபெறவில்லை.

இதன் காரணமாக, மின்சாரக் கட்டணம் கூட மேலதிக சுமையாக மாறியுள்ளது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நாங்கள் நவீனமயமாக்கி அதன் திறனை அதிகரித்து வருகிறோம். மேலும், எண்ணெய் ஆய்வுத் திட்டத்தைத் தொடங்க நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தொண்டர் அடிப்படையில் முன்வந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் எண்ணெய் கண்டுபிடிப்புகள் பற்றிய கதைகளை எங்கள் மக்கள் செவிமடுப்பார்கள். முதல் மசகு எண்ணெய் போத்தல் 1970 தேர்தலின் போது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் நாங்கள் நிபுணர்களை நம்பி அவர்களுக்கு பொறுப்புகளை வழங்கியுள்ளோம். ஆளும்தரப்பு தேவையான வசதிகளை மட்டுமே வழங்குகிறது.

இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் 26,000 பேர் ஒரு நிர்வாக அதிகாரத்தினால் நிர்வகிக்கப்படுகிறார்கள். அவ்வாறு இருக்கும்போது, ஒரு பிரச்சனை எழும்போது, உறுதியாக அந்த விடயத்தைக் கண்டறிவது கடினம். நெருக்கடிக்கு உரிமையாளர் இல்லை. இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே மின்சார சபையை தனியார் மயமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அது வலுசக்தி இறையாண்மையைப் பாதிக்கும் என்பதை நாங்கள் கண்டோம். அந்தச் சட்டத்தை மாற்றியது ஒரு குற்றமா? மின்சார சபை பணியாளர்கள் சட்டப்படி வேலை செய்தல் அல்லது சுகயீன விடுமுறை எடுப்பது இதனால்தானா? அவர்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தெரிவு செய்யப் பாதைகள் உள்ளன.

பிராந்தியத்தில் அதிக மின்சார கட்டணங்களைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று சிலர் கூறுகிறார்கள். எனவே, ஒரு அலகு மின்சாரத்தின் விலையைக் குறைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம். கடந்த காலத்தில், புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்தின் விலை அதிகமாக இருந்தது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தவறாகப் பயன்படுத்தப்பட்டது. சில நீர்வீழ்ச்சிகள் அரசியல்வாதிகளின் உதவியுடன் அனுமதிப் பத்திரம் பெற்று விற்கப்பட்டன. இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற சிலருக்கு மின்சாரம் பற்றி எந்த அறிவும் இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, வடக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வழங்கப்பட்டிருந்தது, 08 டொலர் சதங்களுக்கு ஆகும்.

அதே நிலத்தையும், அதே காற்றையும் பயன்படுத்தி ஒரு அலகு மின்சாரத்தை 04 டொலர் சதங்களுக்கு உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு வழங்கினோம். அதாவது ஒரு மின் அலகு உற்பத்திச் செலவை 50 சதவீதம் குறைக்க முடிந்தது. சியம்பலாண்டுவாவில் 100 மெகாவோட் சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இவ்வளவு பாரிய திட்டம் தொடங்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். இந்த வர்த்தகர்கள் யாரையும் எங்களுக்குத் தெரியாது. அவர்கள் எங்கள் நண்பர்களும் அல்ல. நாட்டிற்கு நன்மை பயக்கும் திட்டங்களை நாங்கள் செயல்படுத்த விரும்புகிறோம்.

கெரவலப்பிட்டி ஒரு டீசல் மின் உற்பத்தி நிலையமாகத்தான் தொடங்கப்பட்டது. ஆனால் அது மின் துறை வல்லுநர்கள் அதை எல் என்ஜி மின் உற்பத்தி நிலையமாக மாற்ற பரிந்துரைத்தனர். அவ்வாறு செய்தால், ஒரு அலகு மின்சாரத்தை 50 சதவீதம் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால் 2015-2019 ஆளும்தரப்பின் அரசுத் தலைவர்க்கும் பிரதமருக்கும் இடையே கெரவலப்பிட்டியை எந்த நிறுவனத்திற்கு வழங்குவது என்பதைத் தெரிவு செய்ய முடியாததால் மோதல் எழுந்தது. இதன் விளைவாக, கெரவலப்பிட்டியை இன்றுவரை எல் என் ஜி மின் உற்பத்தி நிலையமாக மாற்ற முடியவில்லை.

எனவே, மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கத் முடியாததால் நுகர்வோர் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

எதிர்காலத்தில், திருகோணமலையில் உள்ள ஆளும்தரப்பிற்குச் சொந்தமான 24 எரிபொருள் தாங்கிகளை நவீனமயமாக்கி பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டங்கள் உள்ளன. அது குறித்த ஒப்பந்தங்களை சரியான நேரத்தில் தொடங்கி, நிறைவு செய்ய நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கடந்த 8 மாதங்களில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 18.2 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளது. இலங்கையில் நுகர்வோருக்கு எரிபொருளை விநியோகிப்பது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமல்ல.

எனவே, அந்த இலாபத்தை மக்களுக்கு நேரடியாக வழங்க முடியாது. எனவே, கல்வி மற்றும் சுகாதாரம் மூலம் அந்த இலாபத்தை மறைமுகமாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஆளும்தரப்பு 33 அரச நிறுவனங்களை மூட முடிவு செய்தது. அந்த நிறுவனங்களால் மக்களுக்கு எந்த சேவையும் வழங்கப்படுவதில்லை. அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தை குத்தகைக்கு வழங்கி அதன் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கும் சில நிறுவனங்கள் உள்ளன. இந்த நாட்டிற்கு இதுபோன்ற நிறுவனங்கள் தேவையா?

அரச சேவைக்காக 2027 ஆம் ஆண்டு 33000 கோடி ரூபா சம்பள உயர்வுக்காக ஒதுக்கப்படும். ஆனால் இதுபோன்ற பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைக்கின்றதா?

இதைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். அரச நிறுவனங்களில் விருந்தினர் விடுதிகள் உள்ளன. அவற்றை வணிக பயன்பாட்டிற்கு கொண்டு வந்து வருமானம் ஈட்டும் வழியாக முன்னெடுக்கப்பட வேண்டும். சில அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் அரசுத் தலைவர்கள் 31 ஆண்டுகளாக அரச வீடுகளில் வசித்து வந்தனர். அவற்றை நாம் மாற்றுகிறோம்.

நாட்டை நாகரிகமானதாக மாற்ற நாம் செயற்பட்டு வருகிறோம். ஆட்சியாளர்கள் தெய்வீகப்படுத்தப்பட்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம். நமக்கு எல்லாம் தெரியாது. அறிவு உள்ள அனைவரும் கதைக்க வேண்டும். நாம் அனைவருக்கும் இடமளித்துள்ளோம். நிபுணர்கள் பேசாமல் இருப்பது அநியாயம் ஆகும்.

எனவே, வல்லுநர்களும் துறைசார் நிபுணர்களும் கதைக்க வேண்டும். அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொண்டு இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் நாம் முன்னோக்கிச் செல்வோம். நாங்கள் இரக்க உணர்வு கொண்டவர்கள். எனவே, 2022 ஆம் ஆண்டு எரிபொருள் வரிசைகளிலும் எரிவாயு வரிசைகளிலும் மக்கள் இறந்தது போன்ற ஒரு நெருக்கடி மீண்டும் ஏற்பட நாங்கள் இடமளிக்க மாட்டோம்.

கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய வளாகத்தில் ஆறு எரிபொருள் சேமிப்பு தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக னி/வி ஹுஜ-லி சிழிவிமி சிஐஆஷ்ஐளஎஷஷ்ஐஆ - ளீளதீயிளமு சிஐஆஷ்ஐளஎஷஷ்ஐஆ மூா-க்கு நிறுவனத்திற்கு 3.7 பில்லியன் ரூபா மொத்த செலவில் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த காலம் 24 மாதங்களாக உள்ளதுடன், 2027 செப்டெம்பர் மாதத்தில் இந்த திட்டத்தை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கொலன்னாவை வளாகத்தில் புதிய களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணிப்பதன் மூலம் நாட்டின் எரிபொருள் சேமிப்புத் திறனைப் பெரிதும் பலப்படுத்துவதுடன், நாட்டின் அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப விநியோகத்தை முன்னெடுக்க பெற்றோலிய உற்பத்திகளின் நிலைபேறு, வினைத்திறன் மற்றும் தொடர்ச்சியான விநியோகத்திற்கு ஆதரவளிக்கும் என வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு வேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு வேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு வேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2025இல் வெளியிடப்பெற்றது